சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

| | | |
|---|---|---|
| ம.சா. | 2 | நாள் : 03.02.2026 |
| OP. No. | 283/2023 | |
| பெயர் | அருள்ராஜ் | த/பெ |
| வயது | | தொழில் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் மனுதாரரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். நான் முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக எற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை தான்.

| | |
|---|---|
| ம.சா.ஆ.13 | ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| ம.சா.ஆ.14 | உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் |

**எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நீடூர் ஊராட்சி மன்ற தலைவராக 2020 முதல் 2025 வரை இருந்தேன் என்றால் சரிதான். அந்த ஊரில் நடக்கும் பெரும்பாலன சம்பவங்கள் எனக்கு தெரியும். மனுதார் ஜலாலுதினை எனக்கு தெரியும். அவர் அல் ஹசனதுல் ஜாரியா முஸ்லீம் பெண்கள் அனாதை விடுதி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அவர் அந்த விடுதியில் தங்கியுள்ள பெண்களின் அடிப்படை தேவை நிறைவேற்றிவருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த அறக்கட்டளையை நடத்த பணத்தேவை இருக்கிறது என்றால் சரிதான்.